1. Find the wrong statement.
Plea of forfeiture arise if the Lessee
தவறான வாக்கியத்தை கண்டறிக.
குத்தகையில் குத்தகைதாரரின் உரிமை இழப்பு வாதம் எழுவது

(A) Denies the title of Lessor
குத்தகை அளித்தவரின் உரிமை மூலத்தை மறுத்தல்

(B) Lessee becomes Insolvent
குத்தகைதாரர் நொடிப்பு நிலை அடைந்தால்

(C) By accepting subsequent Rent
உரிமை இழப்பிற்கு பின்னர் வாடகை ஏற்றல்

(D) By breach of Lease agreement
வெளிப்படையான நிபந்தனையை மீறுதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

2. Find out the wrong pair
பின்வருவனவற்றுள் தவறான இணையை கண்டுபிடிக்க.

| | | | |
|---|---|---|---|
| (A) | Right to for closure<br>மீட்புரிமை தடுப்பு உரிமை | – | Section 67<br>பிரிவு 67 |
| (B) | Right to mesne mortgage<br>இடைப்பட்ட அடமானம் பெறுபவரின் உரிமைகள் | – | Section 78<br>பிரிவு 78 |
| (C) | Right to sue for mortgage money<br>அடமானத் தொகைக்காக வழக்கிடும் உரிமை | – | Section 68<br>பிரிவு 68 |
| (D) | Right to mortgage in possession<br>சுவாதீனத்தைக் கொண்டுள்ள அடமானம் பெறுபவரின் உரிமைகள் | – | Section 72<br>பிரிவு 72 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

3. Which provision of the Transfer of Property Act, 1882, describe the appointment of receiver?

சொத்துரிமை மாற்றச் சட்டம் 1882-ன் எந்த பிரிவு சொத்து பேணுநர் நியமனர் குறித்து விவரிக்கின்றது?

(A) Section 63–A
பிரிவு 63–A

(B) Section 69–A
பிரிவு 69–A

(C) Section 65–A
பிரிவு 65–A

(D) Section 67–A
பிரிவு 67–A

(E) Answer not known
விடை தெரியவில்லை

4. Besides the mortgagor, which of the following person may institute a suit for redemption of the mortgaged property?

அடமானம் வைப்பவரைத் தவிர, பின்வருபவர்களில் எவர் அடமானம் வைக்கப்பட்ட சொத்தினை மீட்பதற்காக ஓர் உரிமை வழக்கைத் தொடுக்கலாம்.

(A) any surety for the payment of the mortgage-debt
அடமானக் கடன் செலுத்துவதற்காக ஜாமீன்தாரராக இருப்பவர் எவரும்

(B) a receiver
சொத்து பேணுநர்

(C) a tenant
வாடகைதாரர்

(D) an arbitrator
மத்தியஸ்தர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

5. Once a mortgage always a mortgage – means
“ஒரு முறை அடைமானம் என்றால் எப்பொழுதும் அடைமானம்” என்பது

(A) Mortgage has no right to assign the mortgage debt to any other person
அடைமான கடனை வேறு எந்த நபருக்கும் ஒதுக்க உரிமை இல்லை

(B) Mortgage cannot be redeemed after the expiry of fixed period
குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அடைமானத்தை மீட்டெடுக்க முடியாது

(C) The mortgagor's right to redeem the mortgage
அடைமானத்தை மீட்டெடுக்க அடைமானம் வைத்தவருக்கான உரிமை

(D) Mortgagor has no right to assign right of redemption to any person
அடைமான கடனை வேறு எந்த நபருக்கும் ஒதுக்க அடைமானம் வைத்தவருக்கு உரிமை இல்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

6. Legal subrogation arises ________
சட்டபூர்வ மாற்றமர் அடைமான உரிமை எழுவது ________ஆல் ஆகும்.

(A) By Operation of Customs
வழக்காறு நடவடிக்கை மூலம்

(B) By Operation of Tradition
மரபு நடவடிக்கை மூலம்

(C) By Operation of Law
சட்ட நடவடிக்கை மூலம்

(D) By Operation of Usage
வழக்க நடவடிக்கை மூலம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

7. Mortgage is defined under Section ———— provision of "Transfer of Property Act", 1882.

அடைமானம் என்பது "சொத்து மாற்றுச் சட்டம்", 1882ல் ———— பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) Section 48
பிரிவு 48

(B) Section 58
பிரிவு 58

(C) Section 68
பிரிவு 68

(D) Section 78
பிரிவு 78

(E) Answer not known
விடை தெரியவில்லை

8. Under Section 6(c) of Transfer of Property Act, an easement right cannot be transferred apart from ————

சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு-6(இ)ன் கீழ் வசதியுரிமையில் ————னை தவிர உரிமை மாற்றம் செய்ய இயலாது.

(A) Non-dominant heritage
ஓங்கு சொத்து அல்லாத

(B) Non-servient heritage
ஒடுங்கு சொத்து அல்லாத

(C) Servient heritage
ஒடுங்கு சொத்து

(D) Dominant heritage
ஓங்கு சொத்து

(E) Answer not known
விடை தெரியவில்லை

9. [A] : The essential elements of mortgage is that transfer of an interest in immovable property

[A] : அடைமானத்தின் முக்கிய கூறுகள் என்பது அசையாச் சொத்தில் உரிமை மாற்றம் ஒன்று மாற்றப்பட வேண்டும்.

[B] : Interest Transferred should be an interest in specific immovable property.

[B] : அத்தகைய உரிமை மாற்றம், ஒரு குறிப்பிட்ட அசையாச் சொத்தினைக் குறித்து இருக்க வேண்டும்.

(A) Both [A] and [B] are correct

[A] மற்றும் [B] இரண்டும் சரி

(B) Both [A] and [B] are wrong

[A] மற்றும் [B] இரண்டும் தவறு

(C) [A] correct [B] wrong

[A] சரி ஆனால் [B] தவறு

(D) [B] correct [A] wrong

[B] சரி ஆனால் [A] தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

10. The object of doctrine of Marshalling is to
அடைமானச் சொத்தின் வரிசையுரிமைக் கோட்பாட்டின் முக்கிய நோக்கம்

(A) Protect the First Mortgagee
முதன் முதலாக அடைமானம் பெற்றவரை பாதுகாக்க உதவுகிறது

(B) Protect the Mortgagor
அடைமானம் வைத்தவரை பாதுகாக்கிறது

(C) Protect the subsequent Mortgagee
பிந்தைய அடைமானத்தை பெற்றவரை பாதுகாக்கிறது

(D) Protect the Last Mortgagor
கடைசியாக அடைமானம் வைத்தவரை பாதுகாக்கின்றது

(E) Answer not known
விடை தெரியவில்லை

11. Any advantages to the mortgage beyond the interest on the amount advanced as a loan is called as
கடனாக முன்வைக்கப்பட்ட தொகையின் வட்டிக்கு அப்பால் அடமானத்திற்கான ஏதேனும் பலன் என்னவென்று அழைக்கப்படுகிறது?

(A) Collateral advantage
கூடுதல் ஆதாயம்

(B) Deemed advantage
அனுகூலமான ஆதாயம்

(C) Minimal advantage
குறைந்தபட்ச ஆதாயம்

(D) Equitable advantage
சமமான ஆதாயம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

12. Find out the following statements are true about liabilities of mortgagee in possession
பின்வரும் வாக்கியங்களில் அடமானம் பெற்றவரின் பொறுப்புகள் எது சரியானது?

(i) Mortgagee must manage the property
அடமானம் பெற்றவர் கவனத்துடன் சொத்தை நிர்வகித்தல்

(ii) Mortgagee collect the rents and profit
அடமானம் பெற்றவர் சொத்தின் வாடகை மற்றும் வருமானத்தை வசூலித்தல்

(iii) Mortgagee can sell the property
அடமானம் பெற்றவர் சொத்தினை விற்பனை செய்தல்

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

13. Lord Davey explained the doctrine of equity of redemption as "Once a Mortgage always a Mortgage" in
ஒருமுறை அடைமானம் எனில் என்றும் அடைமானமே என்று டேவி பிரபு தகைமை நெறியிலான அடைமான மீட்பு கோட்பாட்டினை விளக்கியிருப்பது

(A) Noakes & Co. Vs Rice (1902) EC 24
நோக்ஸ் அண்ட் கம்பெனி எதிர் ரைஸ் (1902) EC 24

(B) Salt Vs Marquess of Northampton (1892) AC 1
சால்ட் எதிர் மார்க்கஸ் ஆப் நார்த்தாம்டன் (1892) AC 1

(C) Murarilal Vs Devkaran (1965) SC 225
முராரிலால் எதிர் தேவ்கரண் (1965) SC 225

(D) Thambuswami Vs Hussain 1 Mad 1 = 2 IA 241
தம்புசாமி எதிர் ஹுசைன் 1 Mad 1 = 2 IA 241

(E) Answer not known
விடை தெரியவில்லை

14. A mortgage corresponds to the Hypotheca of
ஒரு அடமானம் ———————— சட்டத்தின் கருதுகோளுக்கு ஒத்திருக்கிறது.

(A) Australian Law
ஆஸ்திரேலிய சட்டம்

(B) British Law
பிரிட்டிஷ் சட்டம்

(C) Roman Law
ரோமானிய சட்டம்

(D) Swedon Law
ஸ்வீடன் சட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

15. Assertion [A] : Anomalous Mortgages is not a simple mortgage.

கூற்று [A] : கதம்ப அடைமானம் என்பது தகைமை நெறி அடைமானமாகும்.

Reason [R] : Anomalous mortgages is a mortgage by deposit of title deeds.

காரணம் [R] : வழக்கத்திலுள்ள அடைமானம் கதம்ப அடைமானம் ஆகும்.

(A) [A] is true [R] is False

[A] சரி [R] தவறு

(B) [R] is true [A] is false

[R] சரி [A] தவறு

(C) Both [A] and [R] are not correct

[A] மற்றும் [R] இரண்டும் சரி அல்ல

(D) Both [A] and [R] are true [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] இரண்டும் சரி [R] என்பது [A]க்கான சரியான விளக்கமாகும்

(E) Answer not known

விடை தெரியவில்லை

16. Section 9 of S.R. Act 1963, deals with

குறித்தவகை நிவாரணச் சட்டம் 1963ன், பிரிவு 9 ———————— குறித்து கூறுகின்றது.

(A) Defences
எதிர்வாதங்கள்

(B) Compensation
இழப்பீடு

(C) Limitation
காலவரையறை

(D) Damages
இழப்புகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

17. A person who lends his articles or goods without any charge is called a

ஒரு நபர் தனது பொருட்களையோ (அ) சரக்குகளையோ எந்த கட்டணமும் இல்லாமல் இரவல் கொடுப்பது ———————— எனப்படுவர்.

(A) Gratuitous bailor
கைமாறற்ற ஒப்படைவு செய்பவர்

(B) Bailor for reward
பிரதிபலன் ஒப்படைவு செய்பவர்

(C) Bailor for Hire
வாடகைக்கு ஒப்படைவு செய்பவர்

(D) Bailor for consideration
மறுபயனிற்கு ஒப்படைவு செய்பவர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

18. " 'A' agrees to sell 'B' a hundred tons of oil". There is nothing whatever to show what kind of oil was intented. The agreement is void for ___________ under ___________ of Indian Contract Act, 1872.

'அ' என்பவர் 'ஆ' விற்கு 100 டன் எண்ணெய்யை விற்க ஒப்புக் கொள்கிறார். எந்த வகையான 'எண்ணெய்' என்பதினை எந்த வகையினும் தெளிவுபடுத்த ஒப்பந்தத்தில் ஒன்றும் இல்லை. இவ்ஒப்பந்தமானது இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872ன் படி ——————— காரணத்திற்காக ——————— பிரிவின்படி இல்லா நிலையானதாகும்.

(A) Unlawful, Section-2(i)
சட்டத்திற்க்கு விரோதமான-பிரிவு-2(i)

(B) Illegal, Section-2(g)
சட்டத்திற்க்கு புறம்பான-பிரிவு-2(g)

(C) Negligent, Section-30
கவனக் குறைவாக-பிரிவு-30

(D) Uncertainty, Section-29
நிச்சயமின்மை-பிரிவு-29

(E) Answer not known
விடை தெரியவில்லை

19. Section 14-A of the specific Relief Act, 1963 speaks about

குறித்தவகை தீர்வழிச் சட்டம் 1963ன், பிரிவு 14-A ———— குறித்து கூறுகின்றது.

(A) Power of court to examine witnesses
சாட்சிகளை விசாரிக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்

(B) Power of court to engage experts
வல்லுநர்களை நியமிக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்

(C) Power of court to inspect documents
ஆவணங்களைப் பார்வையிட நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்

(D) Contracts not specifically enforceable
குறித்த வகையில் நிறைவேற்றப்பட முடியாத ஒப்பந்தங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

20. Match the following :
பின்வருவனவற்றைப் பொருத்துக :

| | I | | II |
|---|---|---|---|
| (a) | Coercion<br>வலுக்கட்டாயம் | 1. | Section-18 of Ind. Cont. Act 1872<br>பிரிவு-18 இ.ஒ.ச. 1872 |
| (b) | Fraud<br>மோசடி | 2. | Section-16 of Ind. Cont. Act 1872<br>பிரிவு-16 இ.ஒ.ச. 1872 |
| (c) | Misrepresentation<br>திரித்துக் கூறுதல் | 3. | Section-15 of Ind. Cont. Act 1872<br>பிரிவு-15 இ.ஒ.ச. 1872 |
| (d) | Undue influence<br>தகாத செல்வாக்கு | 4. | Section-17 of Ind. Cont. Act 1872<br>பிரிவு-17 இ.ஒ.ச. 1872 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

21. The Specific Relief Act-1963 is based on __________ report of the law commission of India.
எந்த இந்திய சட்ட ஆணைய அறிக்கையின் காரணமாக குறித்தவகை நிவாரணச் சட்டம் 1963 நடைமுறைபடுத்தப்பட்டது?

(A) 8th report
8வது அறிக்கை

(B) 9th report
9வது அறிக்கை

(C) 11th report
11வது அறிக்கை

(D) 19th report
19வது அறிக்கை

(E) Answer not known
விடை தெரியவில்லை

22. Statement (S), Reasoning (R)

கூற்று (S), காரணம் (R)

Statement [S] : "Lien" means the right of a person to retain possession of some goods belonging to another until some debtor claim of the person in possession is satisfied.

கூற்று [S] : "பற்றுரிமை" என்பது ஒரு நபரின் கடன் அல்லது உரிமைகோரல் திருப்தி அடையும் வரை மற்றொருவருக்குச் சொந்தமான சில பொருட்களின் உடைமையை தக்க வைத்துக் கொள்வதாகும்.

Reason [R] : To exercise the Right of Lien possession must be rightful, not for a particular purpose and must be continuous.

காரணம் [R] : பற்றுரிமையை பயன்படுத்துவதற்கு உடைமை சட்டரீதியாக இருக்க வேண்டும் மற்றும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக இருக்க கூடாது மேலும் தொடர்ந்து இருக்க வேண்டும்.

(A) Statement is right, but Reasoning is wrong

கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(B) Both Statement and Reasoning are wrong

கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு

(C) Statement is wrong but Reasoning is right

கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(D) Both Statement and Reasoning are right

கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி

(E) Answer not known

விடை தெரியவில்லை

23. Special courts are dealt under __________ of Specific Relief Act.
சிறப்பு நீதிமன்றங்கள் என்பன குறித்தவகை நிவாரணச் சட்டத்தில் —————ல் கையாளப்பட்டுள்ளது.

(A) Section 20 A
பிரிவு 20 A

(B) Section 20 B
பிரிவு 20 B

(C) Section 20 C
பிரிவு 20 C

(D) Section 20 D
பிரிவு 20 D

(E) Answer not known
விடை தெரியவில்லை

24. A tender to supply goods as and when required amounts to a
சரக்குகளை விநியோகிப்பது மற்றும் தேவைகேற்ப வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி, இதற்கு வழிவகுக்கும்

(A) Specific offer
குறித்தவகை முனைவு

(B) General offer
பொது முனைவு

(C) Cross offer
எதிர் முனைவு

(D) Standing offer
நிலையான முனைவு

(E) Answer not known
விடை தெரியவில்லை

25. The term 'Bailment' means a delivery of a thing entrusted for
'ஒப்படைவு' என்பது ஒரு பொருளை இதற்காக ஒப்புவிப்பதாகும்.

(A) specific purpose upon a contract
ஒப்பந்தத்தின் பேரில் ஒரு சிறப்பு காரணம்

(B) delivery of goods free of cost
விலையின்றி பொருட்களை வழங்கி ஒப்புவிப்பது

(C) delivery of goods without cost for welfare of public
பொதுநலனிற்காக விலையின்றி பொருட்களை வழங்குவது

(D) both (B) and (C)
(B) மற்றும் (C) இரண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

26. Choose the correct matches :
சரியான பொருத்தங்களை தேர்ந்தெடுக்க :

| | | | |
|---|---|---|---|
| (1) | Farley vs Skinner<br>பார்லி எதிர் ஸ்கின்னர் | – | Compensation for non-pecuniary loss<br>பணமற்ற இழப்பிற்கான இழப்பீடு |
| (2) | Graham vs Campbell<br>கிரகாம் எதிர் காம்பெல் | – | General and special damages classified<br>பொது மற்றும் சிறப்பு இழப்பீடு |
| (3) | Hadley vs Baxendale<br>ஹாட்லி எதிர் பாக்ஷன்டைல் | – | Damages are compensatory, not penal<br>இழப்பீடு என்பது நிறையீடே தவிர தண்டனை அல்ல |
| (4) | Karsandas H. Thacker vs Saran Engg. Co. Ltd.<br>கர்சன் தாஸ் H. தாக்கர் எதிர் சரண் என்ஜி. கம். லிமிடெட் | – | Loss of profits is special loss<br>லாப இழப்பு என்பது சிறப்பு இழப்பாகும் |

(A) (1) and (3) are correct
(1) மற்றும் (3) சரி

(B) (2) and (3) are correct
(2) மற்றும் (3) சரி

(C) (1) and (4) are correct
(1) மற்றும் (4) சரி

(D) (3) and (4) are correct
(3) மற்றும் (4) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

27. In ———— case, A promissory note, executed in favour of a minor is valid and can be enforced the decided by the court of law.

———— வழக்கில் இளவருக்கு ஆதரவாக நிறைவேற்றப்படும் உறுதிமொழிப் பத்திரம் செல்லுபடியாகும் என்றும் அதனை நீதிமன்றத்தில் அமல்படுத்த முடியும் என்று கூறுகிறது.

(A) Mannu Singh (vs) Umadad Pande
மன்னு சிங் (எதிர்) உமாதத் பாண்டே

(B) Sharafat Ali (vs) Noor Mohammed
ஷரஃபத் அலி (எதிர்) நூர் முகமது

(C) Takri Devi (vs) Rama Dogra
தக்ரி தேவி (எதிர்) ராமா டோக்ரா

(D) Sethani (vs) Bhanna
சேத்தானி (எதிர்) பன்னா

(E) Answer not known
விடை தெரியவில்லை

28. 'A' agrees to sell 'B' 100 bags of wheat of Rs. 1650/- per bag. Before delivery, the government bans private trading in wheat. The contract becomes Void due to __________ under __________ of Indian Contract Act - 1872.

'அ' என்பவர் 'ஆ' விடம் நூறு பைகள் கோதுமையை ஒரு பைக்கு ரூபாய். 1650/-க்கு விற்க ஒப்புக் கொள்கிறார். அதனை டெலிவரி செய்வதற்கு முன் அரசாங்கம் கோதுமையை தனியார் வர்த்தகம் செய்வதை தடை செய்கிறது. இந்திய ஒப்பந்தச் சட்டம் – 1872ல் ———— பிரிவுகளின்படி இவ்ஒப்பந்தம் இல்லா நிலையானது ———— ஆகும்.

(A) Illegal or unlawful – Section-23
சட்டத்திற்க்கு புறம்பாக மற்றும் விரோதமாக – பிரிவு-23

(B) Subsequent illegality – Section-56
தொடர் சட்டத்திற்கு புறம்பான – பிரிவு-56

(C) Supervening impossibility – Section-56
மேற்பார்வை சாத்தியமற்றது – பிரிவு-56

(D) Unenforceable – Section-64
செயல்படுத்த முடியாதது – பிரிவு-64

(E) Answer not known
விடை தெரியவில்லை

29. Section 65 of the TP Act 1882, speaks about
சொத்துரிமை மாற்றுச் சட்டம் 1882ன், பிரிவு 65 ———— பற்றி கூறுகின்றது.

(A) Accession to mortgaged property
அடமானச் சொத்துக்கு சேர்க்கை

(B) Renewal of mortgaged lease
அடமானம் வைக்கப்பட்ட குத்தகையை புதுப்பித்தல்

(C) Implied contracts by mortgager
அடமானம் வைப்பவரால் செய்யப்படும் உட்கிடையான ஒப்பந்தங்கள்

(D) Improvements to mortgaged property
அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மேம்பாடுகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

30. The doctrine of 'holding out' is provided in section ________ of I.P.A. 1832.
இந்திய கூட்டாண்மையர் சட்டம் 1832ன், ———— பிரிவு உரிமை போலிச் செயல் கோட்பாடு குறித்து கூறுகின்றது.

(A) Section 38 of I.P.A. 1832
பிரிவு 38 இ.கூ.ச. 1832

(B) Section 37 of I.P.A. 1832
பிரிவு 37 இ.கூ.ச. 1832

(C) Section 27 of I.P.A. 1832
பிரிவு 27 இ.கூ.ச. 1832

(D) Section 28 of Ind.Part.Act. 1832
பிரிவு 28 இ.கூ.ச. 1832

(E) Answer not known
விடை தெரியவில்லை

31. Match the following cases relating to judicial review with its corresponding year :

நீதிமறுஆய்வு தொடர்பான கீழ்கண்ட வழக்குகளை அவை தொடர்புடைய வருடத்தோடு பொருத்துக :

(a) Padfield-vs-Minister of Agriculture Fisheries and food — 1. 1905

பாட்பீல்ட்-எதிர்-வேளாண், மீன் மற்றும் உணவு அமைச்சர் — 1905

(b) Small-vs-Moss — 2. 1968

ஸ்மால்-எதிர்-மோஸ் — 1968

(c) Roberts-vs-Hopwood — 3. 1938

ராபர்ட்-எதிர்-ஹப்வுட் — 1938

(d) Westminster corporation-vs-London and North Western Railway Co — 4. 1925

வெஸ்ட்மின்ஸ்டர் கழகம்-எதிர்-லண்டன் வடமேற்கு ரயில்வே நிறுவனம் — 1925

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

32. Among the following the writ of __________ is described as a "great constitutional privilege".
பின்வருவனவற்றுள் ———————— நீதிப்பேராணையானது "மிகச் சிறப்பான அரசியலமைப்புச் சலுகை" என வர்ணிக்கப்படுகிறது.

(A) Writ of Certiorari
சான்றுகளை கோரிப்பெறும் நீதிப்பேராணை

(B) Writ of Qua Warranto
தகுதி வினவும் நீதிப்பேராணை

(C) Writ of Mandamus
நெறியுறுத்தும் நீதிப்பேராணை

(D) Writ of Habeas Corpus
ஆட்கொணர் நீதிப்பேராணை

(E) Answer not known
விடை தெரியவில்லை

33. The concept of - "Natural Justice" is closely associated with __________.
"இயற்கை நீதி" கோட்பாடானது பின்வரும் எந்த கோட்பாட்டுடன் நெருக்கமாக தொடர்புடையது ?

(A) Doctrine of Ultra Vires
தன்வரம்பு மீறல் கோட்பாடு

(B) Doctrine of Estoppel
முரண்தடைக் கோட்பாடு

(C) Doctrine of precedent
முன்தீர்ப்புக் கோட்பாடு

(D) Doctrine of Stare Decisis
உற்றுநோக்கும் முடிவு கோட்பாடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

34. Assertion [A] : A public corporation can enter into contract and can sue or be sued for breach of contract.

கூற்று [A] : ஒரு பொது கூட்டுறுநிறுவனம் ஒப்பந்தத்தில் ஈடுபடலாம் மற்றும் ஒப்பந்த மீறுதலுக்காக வழக்குத் தொடரலாம் அல்லது வழக்குத் தொடரப்படலாம்.

Reason [R] : Even though a corporation is neither an agency nor a department of the government, the provisions of Art. 299 of the Constitution apply to a contract entered between a public Corporation and a private individual.

காரணம் [R] : ஒரு கூட்டுறுநிறுவனம் அரசாங்கத்தின் ஒரு நிறுவனமோ அல்லது துறையோ அல்ல என்றாலும், ஷரத்து 299-ன் வகையம் ஒரு கூட்டுறுநிறுவனத்திற்கும் தனிநபருக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்திற்குப் பொருந்தும்.

(A) Both [A] and [R] are correct; and [R] is correct explanation to [A]

[A], [R] இரண்டும் சரியானவை மற்றும் [R] ஆனது கூற்று [A]க்கு சரியான விளக்கம் ஆகும்

(B) Both [A] and [R] are correct; and [R] is not correct explanation to [A]

[A], [R] இரண்டும் சரியானவை மற்றும் [R]-ஆனது கூற்று [A]க்கு சரியான விளக்கம் அல்ல

(C) [A] is correct, and [R] is wrong

[A] சரியானது மற்றும் [R] தவறானது

(D) [A] is wrong and [R] is correct

[A] தவறானது மற்றும் [R] சரியானது

(E) Answer not known

விடை தெரியவில்லை

35. Find the correct statements with regard to the characteristics of public corporations.
பொது கூட்டுறு நிறுவனத்தின் சிறப்பியல்கள் தொடர்பான சரியான கூற்றுக்களைக் கண்டறியவும்.

(i) A corporation is established by a statute

ஒரு கூட்டுறு நிறுவனம் ஒரு சட்டத்தால் தோற்றுவிக்கப்படுகிறது

(ii) A corporation may be established by an executive order

ஒரு கூட்டுறு நிறுவனம் ஒரு நிருவாக உத்தரவால் தோற்றுவிக்கப்படுகின்றது

(iii) A corporation may exercise its rights, perform its functions without following any rules

எந்த சட்டவிதிகளையும் பின்பற்றாமல், ஒரு கூட்டுறு நிறுவனம் தனது பணிகளையும் உரிமைகளையும் செயல்படுத்திக் கொள்ளலாம்.

(iv) A corporation can possess, hold and dispose of property

ஒரு கூட்டுறு நிறுவனம் சொத்துக்களை தன்னிருப்பில் வைத்துக் கொள்ளவும், பெற்றுக் கொள்ளவும் விற்பனை செய்யவும் முடியும்.

(v) A corporation is not liable for breach of contract

ஒரு கூட்டுறு நிறுவனம் ஒப்பந்த மீறுகைக்கு பொறுப்பாகாது.

(A) (ii), (iii) and (iv) only
(ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(B) (i) and (iv) only
(i) மற்றும் (iv) மட்டும்

(C) (i), (iv) and (v) only
(i), (iv) மற்றும் (v) மட்டும்

(D) (ii), (iii) and (v) only
(ii), (iii) மற்றும் (v) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

36. Article 227 of the Indian Constitution grants High court supervisory power overall court and tribunals, but this power does not extend to ___________.

இந்திய அரசமைப்பின் சரத்து 227-ன் படி உயர்நீதிமன்றமானது தமது எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் மீது கண்காணிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது, ஆனால் இது ————க்கு பொருந்தாது.

(A) Election Tribunal
தேர்தல் தீர்ப்பாயம்

(B) Industrial Tribunal
தொழிலக தீர்ப்பாயம்

(C) Revenue Tribunal
வருவாய் தீர்ப்பாயம்

(D) Military Tribunal
இராணுவ தீர்ப்பாயம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

37. Match the following Tribunal with its year of creation :
பின்வரும் தீர்ப்பாயங்களை அவை தொடங்கப்பட்ட ஆண்டோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Industrial tribunal<br>தொழிலக தீர்ப்பாயம் | 1. | 1989<br>1989 |
| (b) | Income tax tribunal<br>வருமான வரி தீர்ப்பாயம் | 2. | 1947<br>1947 |
| (c) | Railway rates tribunals<br>இரயில்வே கட்டண தீர்ப்பாயம் | 3. | 1985<br>1985 |
| (d) | Central Administrative Tribunal<br>மத்திய நிர்வாக தீர்ப்பாயம் | 4. | 1961<br>1961 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

38. Assertion [A] : Decisions of Tribunals are administrative rather than judicial.

கூற்று [A] : தீர்ப்பாயங்களின் முடிவு நீதிமுறையை காட்டிலும், நிர்வாக ரீதியானது.

Reason [R] : A Tribunal reaches a finding of fact, applies law to such facts and decides legal questions objectively and not on the basis of executive policy.

காரணம் [R] : தீர்ப்பாயங்கள் பொருண்மைகளை கண்டறிந்து, அதற்கேற்றவாறு சட்டங்களை அணுகி, சட்டக் கேள்விகளுக்கு கருத்துறு சார்ந்து பதிலளிக்கின்றது. மாறாக நிர்வாக கொள்கை ஒட்டியல்ல.

(A) [A] is true but [R] is false

[A] சரி, ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]-வின் சரியான விளக்கமாகும்

(C) [A] is false, [R] is true

[A] தவறு, [R] சரி

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

[A], [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]-வின் சரியான விளக்கமல்ல

(E) Answer not known

விடை தெரியவில்லை

39. Match the following :
கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | A | | B |
|---|---|---|---|
| | Kinds of writs<br>நீதிப்பேராண்மையின் வகைகள் | | Meanings<br>பொருள் |
| (a) | Habeas Corpus<br>ஆட்கொணர் நீதிப்பேராண்மை | 1. | to certify<br>சான்றளி |
| (b) | Mandamus<br>செயலுறுத்தும் நீதிப்பேராண்மை | 2. | what is your authority to hold the post?<br>இந்த பதவி வகிப்பதற்கு உனக்கு என்ன அருகதை இருக்கு? |
| (c) | Prohibition<br>தடையுறுத்தும் நீதிப்பேராண்மை | 3. | to produce the body<br>உடலை சமர்ப்பி |
| (d) | Certiorari<br>நெறியுறுத்தும் நீதிப்பேராண்மை | 4. | to command<br>கட்டளையிடு |
| (e) | Quo warranto<br>தகுதிவினவும் நீதிப்பேராண்மை | 5. | to stay<br>தடையுறுத்து |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 3 | 5 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| (C) | 1 | 4 | 5 | 3 | 2 |
| (D) | 1 | 5 | 4 | 3 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

40. In which case, the Supreme Court held that a "fair hearing" has two justiciable elements - (i) an opportunity of hearing must be afforded and (ii) such opportunity must be reasonable one?

(i) கேட்டலுக்கான வாய்ப்பு அளித்தல் மற்றும் (ii) அந்த வாய்ப்பு அளித்தல் நியாயமான ஒன்றானதாகவும் இருத்தல் ஆகிய இரண்டும் வழக்கிட்டு நிலைநாட்டக் கூறுகளான "நியாயமாக கேட்டலே" ஆகும் என உச்சநீதிமன்றம் எந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளது?

(A) Indru Ramchand Bharvani v. Union of India (1988) 4 SCC
இந்ரு ராமசந்திர பர்வானி-எதிர்-இந்திய யூனியன் (1988) 4 SCC

(B) Nandlal Bajaj v. State of Punjab (AIR 1981 SC)
நண்டலால் பஜாஜ்-எதிர்-பஞ்சாப் மாநில அரசு (AIR 1981 SC)

(C) M.H. Hoskot v. State of Maharastra (AIR 1978 SC)
எம்.ஹெச். ஹோஸ்காட்-எதிர்-மஹாராஷ்டிரா மாநில அரசு (AIR 1978 SC)

(D) Kavita v. State of Maharastra (AIR 1981 SC)
கவிதா-எதிர்-மஹாராஷ்டிரா மாநில அரசு (AIR 1981 SC)

(E) Answer not known
விடை தெரியவில்லை

41. Consider the following tribunals :
கீழ்கண்ட தீர்ப்பாயங்களை கருத்தில் கொள்ளவும் :

(i) Settlement Commissioner
தீர்வு ஆணையர்

(ii) Conciliation officer
சமரச அதிகாரி

(iii) Advisory Board under Preventive Detention Laws
தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் ஆலோசனைக் குழு

(iv) Speaker of Parliament or Legislative Assembly
பாராளுமன்ற சபாநாயகர் அல்லது சட்டமன்ற சபாநாயகர்

(v) Payment of Wages Authority
ஊதியம் செலுத்தும் அதிகாரம் பெற்ற அமைப்பு

In the above tribunals, which of the tribunals comes under the meaning of Art. 227 of the Constitution?
மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பாயத்தில், எது/எவை அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 227ன் கீழுள்ள பொருளில் வரும்?

(A) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(B) (i), (iv) and (v) only
(i), (iv) மற்றும் (v) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii), (iii) and (iv) only
(ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

42. In St. John's Teacher Training Institute Case, the Supreme Court emphasized the need for ____________
செயிண்ட் ஜான்ஸ் ஆசிரியர் பயிற்சி மைய வழக்கில், இந்திய உச்சநீதிமன்றம் ————————ன் தேவையை வலியுறுத்தியது.

(A) Separation of power
அதிகாரப் பிரிவினை

(B) Rule of law
சட்டத்தின் ஆட்சி

(C) Delegated legislation
சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு

(D) Judicial control
நீதிமன்றக் கட்டுப்பாடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

43. "The rules of natural justice would apply even an administrative order or decision", held in
இயற்கை நீதி கோட்பாடானது நிர்வாக உத்தரவு அல்லது நிர்வாக முடிவுகளுக்கும் பொருந்தும் என ———————— வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(A) K.L. Tripathi v. State Bank of India
கே.எல்.திர்பாதி எதிர் பாரத ஸ்டேட் வங்கி

(B) Dev Dutt v. Union of India
தேவ் தத் எதிர் ஒன்றிய அரசு

(C) State of Orissa v. Dr. Binapani Dei
ஒரிசா மாநில அரசு எதிர் டாக்டர் பினபானி தேய்

(D) Ravi Naik v. Union of India
இரவி நாயக் எதிர் ஒன்றிய அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

44. "Delegatus non potest delegare" means
"ஒப்படைவு அதிகாரத்தை மீண்டும் அளித்திட" இயலாது என்பது

(A) A delegate can further delegate
அளிப்படைவு அதிகாரத்தை பெற்றவர் மீண்டும் மற்றவருக்கு அளிக்க முடியும்

(B) A delegate cannot further delegate
அளிப்படைவு அதிகாரத்தை பெற்றவர் மீண்டும் மற்றவருக்கு அளிக்க முடியாது

(C) Delegation is bad in law
அளிப்படைவு என்பது சட்ட தவறு

(D) Delegated power is not retainable
அளிப்படைவு அதிகாரத்தை திரும்பபெற முடியாது

(E) Answer not known
விடை தெரியவில்லை

45. Assertion [A] : Administrative law has been described as the most "outstanding legal development of the twentieth century".

கூற்று [A] : "இருபதாம் நூற்றாண்டில் நிருவாகச் சட்டமானது மிக உன்னத வளர்ச்சியை சட்டத் துறையில்" அடைந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

Reason [R] : The rapid growth of Administrative law in modern times is the indirect result of the growth of administrative powers and functions.

காரணம் [R] : நிருவாக அதிகாரங்களும் மற்றும் பணிகளும் மறைமுகமாக நிருவாகச் சட்டத்தின் தொடர் வளர்ச்சிக்கு தற்காலத்தில் ஒரு முடிவாக அமைகிறது.

(A) [A] is true and [R] is correct explanation to [A]

[A] சரியானது மற்றும் [R] என்பது [A] இன் சரியான விளக்கம்

(B) [A] is true and [R] is not correct explanation to [A]

[A] சரியானது மற்றும் [R] என்பது [A] இன் சரியான விளக்கம் அல்ல

(C) [A] is true but [R] is false

[A] சரியானது ஆனால் [R] சரியானது அல்ல

(D) [A] is false but [R] is correct

[A] தவறானது ஆனால் [R] சரியானதாகும்

(E) Answer not known

விடை தெரியவில்லை

46. Consider the following statements with respect to reasons for growth of Administrative law
நிருவாகச் சட்டம் வளர்ச்சிக்கான காரணம் குறித்த கீழ்கண்ட கூற்றுகளை கருதவும்.

(i) The state has focused its policies towards the Welfare State.
அரசாங்கம் மக்களின் நலனில் அதன் கொள்கைகளின் மூலம் கவனத்தை செலுத்துவதனால்

(ii) The Judicial system proved to decide and settle all the disputes.
அனைத்து பிணக்குகளையும் தீர்மானித்து தீர்ப்பதில் நீதிமன்றமுறை நிரூபணம் செய்திருப்பதாலும்

(iii) The Administrative Tribunals are not found by the rules of evidence and procedure while deciding complex problems.
சிக்கலான சிக்கல்களையும் தீர்மானிக்கும்போது நிருவாக தீர்ப்பாயங்கள் சாட்சிய விதிமுறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்ற கட்டுப்பட வேண்டியதில்லை

(iv) The Legislative process was inadequate.
சட்டமியற்றும் முறை போதுமானதாக இல்லை

(v) Administrative authorities cannot take effective steps for enforcement of preventive steps.
தடுப்பு நடவடிக்கைகள் குறித்த நடவடிக்கைகளை நிருவாக அதிகாரம் பெற்ற அமைப்புகள் செயல்திறன் மிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியாது.

In the above statements which is/are incorrect?

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவைகள் சரியானவை அல்ல?

(A) (i), (ii) and (iii) only
(i), (ii) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) and (iv) only
(ii) மற்றும் (iv) மட்டும்

(C) (ii) and (v) only
(ii) மற்றும் (v) மட்டும்

(D) (i), (iii) and (iv) only
(i), (iii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

47. __________ remarks that “It is logically impossible to distinguish administrative law from constitutional law and all attempts to do so are artificial”.

“அரசமைப்புச் சட்டத்திலிருந்து நிர்வாக சட்டத்தை வேறுபடுத்த பார்ப்பது தர்க்க ரீதியில் இயலாத ஒன்றாகும் மேலும், அவ்வாறு செய்யமுயல்வது செயற்கையானது” என பின்வரும் எந்த அறிஞர் குறிப்பிட்டார்?

(A) Ivor Jennings
ஐவர் ஜென்னிங்

(B) Dicey
டைசி

(C) Garner
கார்னர்

(D) Keith
கெயித்

(E) Answer not known
விடை தெரியவில்லை

48. In which of the following country constituted ‘Franks Committee’ to investigate elaborately into the working of various tribunals and quasi-judicial bodies?

நீதிமுறை போல்வு அமைப்புகள் மற்றும் தீர்ப்பாயங்களின் செயல்பாடுகளை பற்றி விரிவாக ஆய்வு செய்வதற்கு, பின்வரும் எந்த நாடு ‘பிரான்க்’ குழுவை அமைத்தது?

(A) United states of America
அமெரிக்க ஐக்கிய நாடு

(B) Britain
பிரிட்டன்

(C) India
இந்தியா

(D) Canada
கனடா

(E) Answer not known
விடை தெரியவில்லை

49. Droit Administratif is the name given to the Administrative Law prevailing in
'டிராய் அட்மினிஸ்ரேட்டிவ்' என்பது நிர்வாக சட்டத்திற்கு வழங்கப்பட்ட பெயர், இது நடைமுறையில் பின்வரும் எந்த நாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

(A) France
பிரான்ஸ்

(B) Germany
ஜெர்மனி

(C) Canada
கனடா

(D) India
இந்தியா

(E) Answer not known
விடை தெரியவில்லை

50. ___________ says, "every power tend to corrupt and absolute power tend to corrupt absolutely".
"ஒவ்வொரு அதிகாரமும் ஊழல் செய்ய முனைகிறது, முழுமையான அதிகாரம் முற்றிலும் ஊழல் செய்ய முனைகிறது" இதை கூறியவர்.

(A) Kelson
கெல்சன்

(B) Immanuel Kant
இமானுவேல் காந்த்

(C) Wade
வேட்

(D) Lord Acton
லார்ட் ஆக்டன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

51. Statement 1 : The summons, when served personally on the person summoned, no need to give the duplicate copy of the summons to the person summoned.

கூற்று 1 : அழைப்பாணையானது முன்னிலையாகும்படி கட்டளையிடப் பட்டவருக்கு இரட்டைப்படிகளில் ஒன்றை அவருக்கு கொடுத்தல் தேவையில்லை.

Statement 2 : Every person, on whom summons is served, sign a receipt.

கூற்று 2 : அழைப்பாணையைச் சார்வு செய்யும் போது, சார்வு செய்யப்படும் ஒவ்வொருவரும் கையொப்பமிடுதல் வேண்டும்.

(A) (1) and (2) are true
(1) மற்றும் (2) சரி

(B) (1) is true (2) is false
(1) சரி (2) தவறு

(C) (1) is false (2) is true
(1) தவறு (2) சரி

(D) (1) and (2) are false
(1) மற்றும் (2) தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

52. Form of warrant of arrest dealt under section ________ BNSS-2023

பிடிகட்டளையின் வடிவம் பற்றி 2023 பா.கு.பா.ச ________ பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(A) Section 72 of BNSS
பிரிவு 72

(B) Section 73 of BNSS
பிரிவு 73

(C) Section 74 of BNSS
பிரிவு 74

(D) Section 75 of BNSS
பிரிவு 75

(E) Answer not known
விடை தெரியவில்லை

53. Match the following :

பின்வருவனவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Power to compel restoration of abducted females<br>கடத்தப்பட்ட பெண்களைத் திரும்ப ஒப்படைப்பதைக் கட்டாயப்படுத்துவதற்குள்ள அதிகாரம் | 1. | Section 100 BNSS<br>பிரிவு 100 பா.கு.பா.ச |
| (b) | Search for persons wrongfully confined<br>சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்ட நபர்களுக்காகச் சோதனையிடுதல் | 2. | Section 101 BNSS<br>பிரிவு 101 பா.கு.பா.ச |
| (c) | Power to declare certain publications forfeited and to issue search warrants<br>குற்றத்தில் ஈடுபட்ட செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்கள் தண்டயிழப்புக்கு உட்படும் என்று விளம்புவதற்கும் அவற்றிற்காகச் சோதனைக் கட்டளைகளை பிறப்பிப்பதற்குமுள்ள அதிகாரம் | 3. | Section 99 BNSS<br>பிரிவு 99 பா.கு.பா.ச |
| (d) | Application to set aside declaration of forfeiture before high court<br>பறிமுதல் விளம்புகையை நீக்குவதற்கு உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பம் | 4. | Section 98 BNSS<br>பிரிவு 98 பா.கு.பா.ச |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

54. If the proclaimed person appeal within the time specified in the proclamation, the court shall make an order relating to property is ___________.

பிரகடனப்படுத்தப்பட்ட நபர், அந்த அறிவிப்பில் குறிப்பிட்ட காலத்திற்குள் முன்னிலையாவாரானால், நீதிமன்றம் பற்றுகையிலிருந்து அந்த சொத்தினை ___________.

(A) Releasing from the attachment
விடுவித்து கட்டளையொன்றைப் பிறக்கலாம்

(B) Refuse to release the property
விடுவித்து மறுத்து கட்டளையொன்றைப் பிறக்கலாம்

(C) Sale the property
சொத்தினை விற்பனை செய்யலாம்

(D) Restoration of attached property
சொத்தினை திரும்ப ஒப்படைக்கலாம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

55. Offences not punishable with death, imprisonment for life or imprisonment for a term not exceeding ___________ may by summarily.

மரண தண்டனையோ, ஆயுள் தண்டனையோ அல்லது ___________ அதிகமான சிறை தண்டனையோ விதிக்க முடியாத குற்றங்கள் சுருக்குமுறை வழக்கு விசாரணையாக நடத்த முடியும்.

(A) 3 months
3 மாதங்களுக்கு

(B) 6 months
6 மாதங்களுக்கு

(C) 1 year
1 வருடத்திற்கு

(D) 2 years
2 வருடத்திற்கு

(E) Answer not known
விடை தெரியவில்லை

56. In BNSS, 2023 who has the power to try summarily the criminal cases?

பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம், 2023ன் கீழ், குற்றவழக்குகளை சுருக்க முறையில் விசாரிக்க, யாருக்கு அதிகாரம் உண்டு?

(A) Munsiff
முன்சிஃப்

(B) Magistrate II class
II வகுப்பு நடுவர்

(C) Magistrate I class
முதல் வகுப்பு நடுவர்

(D) Special public prosecutor
சிறப்பு அரசு வழக்கறிஞர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

57. According to section 251(1) of the BNSS, if the offence is exclusively triable by the court of session, within how many days must the judge frame a charge against the accused?

பிரிவு 251(1), BNSS-ன் படி, அந்த குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே செய்யத்தக்கதானால், எத்தனை நாட்களுக்குள் குற்றசாட்டுரையை எழுத்து மூலம் வனைதல் வேண்டும்?

(A) 30 days
30 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 45 days
45 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

58. Under Section 201(1) of BNSS, an offence of dacoity may be tried by a court at __________.

பிரிவு 201(1), பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம்-ன் கீழ், கூட்டுக்கொள்ளையில் ஈடுபட்டவர்களை எந்த நீதிமன்றம் விசாரணை செய்யப்படலாம்?

(A) only where the offence was committed
எங்கு குற்றம் செய்யப்பட்டதோ அந்த நீதிமன்றம்

(B) only where the dacoits were arrested
எங்கு கூட்டுக் கொள்ளையர்கள் கைது செய்யப்படுகிறார்களோ அங்கு

(C) where the offence was committed or the accused is found
எங்கு குற்றம் செய்யப்பட்டதோ (அல்லது) எதிரி காணப்படுகிறாரோ

(D) only where victim resides
எங்கு பாதிக்கப்பட்டவர் வசிக்கிறாரோ

(E) Answer not known
விடை தெரியவில்லை

59. Assertion [A] : Court of session or magistrate may refer a case pending to High Court on any question of law.

கூற்று [A] : அமர்வு நீதிமன்றமோ அல்லது நீதித்துறை நடுவர் நீதிமன்றமோ, தன்னிடம் நிலுவையில் உள்ள வழக்கில் சட்டம் சார்ந்த வினாக்கள் எழுமானால் அதற்கு விளக்கம் கேட்டு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பலாம்.

Reason [R] : The question involved is as to validity of any act, ordinance, regulation etc.

காரணம் [R] : சட்டம் சார்ந்த சங்கதியானது ஒரு சட்டமோ, அல்லது அவசர சட்டமோ அல்லது ஒழுங்குமுறை விதிகள் சார்ந்ததாகவோ இருக்கலாம்.

(A) [A] is true : [R] is false

[A] சரி [R] தவறு

(B) Both [A] and [R] are true and [R] is correct explanation

[A] மற்றும் [R] சரி, மேலும் [R] சரியான விளக்கமாக உள்ளது.

(C) [A] is false : [R] is true

[A] தவறு [R] சரி

(D) Both [A] and [R] is true; but [R] is not correct explanation

[A] மற்றும் [R] சரி, ஆனால் [R] சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known

விடை தெரியவில்லை

60. The functionaries under the criminal procedure code, 1973 are : Find out the correct one.

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ன் கீழுள்ள செயல்பாட்டாளர்கள் சரியான ஒன்றை தேர்ந்தெடு.

(i) Police, Prosecutors and Magistrate only
காவல் அதிகாரி, அரசு வழக்குரைஞர்கள் மற்றும் நீதிமன்றங்கள்

(ii) Police, Magistrates and Defence counsels only
காவல் அதிகாரி, நீதித்துறை நடுவர்கள் மற்றும் எதிர்தரப்பு வழக்குரைஞர்கள்

(iii) Police, Prosecutors, Defence counsels, Magistrates (or) Judges, Prison authorities (or) Correctional services personnel
காவல் அதிகாரி, அரசு வழக்குரைஞர்கள், எதிர்தரப்பு வழக்குரைஞர்கள், நீதித்துறை நடுவர்கள் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகள், சிறைதுறை அதிகாரிகள் மற்றும் சீர்திருத்த அலுவலர்கள்.

(iv) Accused and Victim only
குற்றம் சாட்டப் பெற்றவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் மட்டும்

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (iii) only
(iii) மட்டும்

(C) (i) only
(i) மட்டும்

(D) (iv) only
(iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

61. A person shall not be guilty of contempt of court for ________.
நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கீழ்கண்ட ———— தாக்கல் செய்ய முடியாது.

(A) Fair criticism of Judicial
நீதிமன்ற செயலின் நியாயமான விமர்சனம்

(B) Criticism of Judge
நீதிபதியின் மீதான விமர்சனம்

(C) Criticism of Judgement with ill will
கெட்ட எண்ணத்துடன் தீர்ப்பின் மீதான விமர்சனம்

(D) Disobedience to an order
ஓர் தீர்ப்புரைக்கு கீழ்படியாமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

62. The Criminal Procedure Code 1973 has come into force on ————.
குற்றவியல் நடைமுறைச்சட்டம், 1973 ———— தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

(A) 1st April, 1974
ஏப்ரல், 1, 1974

(B) 1st April, 1973
ஏப்ரல், 1, 1973

(C) 1st April, 1972
ஏப்ரல், 1, 1972

(D) 21st April, 1973
ஏப்ரல், 21, 1973

(E) Answer not known
விடை தெரியவில்லை

63. Under which provision of contempt of courts Act, 1971 deal with power of Supreme Court and High Courts to make rule under this Act 1971?

நீதிமன்றங்கள் அவமதிப்பு சட்டம், 1971-ல் விதிகள் இயற்றுவதற்கு எந்த பிரிவில் உச்சநீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

(A) 24
(B) 21
(C) 20
(D) 23
(E) Answer not known
விடை தெரியவில்லை

64. (i) Where the high court has on appeal reversed an order of acquittal of an accused person and convicted him and sentenced him to death or to imprisonment for life or imprisonment for a term of 10 years or more, may appeal to sessions court

உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டின் பேரில், குற்றம் சாட்டப்பட்டவரின் விடுதலைத் தீர்ப்பை மாற்றி அவருக்கு மரண தண்டனையோ, (அல்லது) ஆயுள் சிறைத் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் சிறைத்தண்டனையோ அல்லது அதற்கு மேலோ அளித்திருக்கும் போது, அவர் அமர்வு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம்.

(ii) Appeal against conviction by High court dealt under section 420 of BNSS.

உயர்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சில வழக்குகளில் மேல் முறையீடு செய்தல் பற்றி பிரிவு (பா.கு.பா.ச) 420 கூறுகிறது.

(A) (i) true (ii) false
(i) சரி (ii) தவறு
(B) (i) false (ii) true
(i) தவறு (ii) சரி
(C) (i) and (ii) are true
(i) மற்றும் (ii) இரண்டும் சரி
(D) (i) and (ii) are false
(i) மற்றும் (ii) இரண்டும் தவறு
(E) Answer not known
விடை தெரியவில்லை

65. The contempt of Courts Act, came into force on ___________.
நீதிமன்றங்கள் அவமதிப்பு சட்டம், அமலுக்கு வந்த தினம் ___________ .

(A) $24^{th}$ November 1971
24 நவம்பர் 1971

(B) $24^{th}$ December 1971
24 டிசம்பர் 1971

(C) $24^{th}$ November 1972
24 நவம்பர் 1972

(D) $24^{th}$ December 1972
24 டிசம்பர் 1972

(E) Answer not known
விடை தெரியவில்லை

66. Find out which of the following fact is not contempt of court.
கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எந்த பொருண்மையானது (நீதிமன்ற) அவமதிப்பு ஆகாது?

(i) Wilful disobedience to decree
ஆணைக்கு வேண்டுமென்றே கீழ்ப்படியாமல் இருத்தல்

(ii) Publication of a video interfering judicial proceedings
நீதித்துறை நடவடிக்கைகளில் தலையிடும் காணொளி வெளியீடு

(iii) Fair reporting of judicial proceeding
நீதித்துறை நடவடிக்கைகளை பாரபட்சமின்றி வெளியிடுதல்

(iv) Publication of a newspaper without obstructing the course of justice
நீதியின் போக்கைத் தடுக்காமல் செய்தித்தாள் வெளியிடுதல்

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) and (iv) only
(iii) மற்றும் (iv) மட்டும்

(D) (iv) and (i) only
(iv) மற்றும் (i) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

67. An appeal for contempt of court can be filed before the Supreme Court, ___________ from the date of the order received.
நீதிமன்ற அவமதிப்பு குறித்த மேல்முறையீடு வழக்கு உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வந்த ————— குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(A) within 30 days
30 நாட்களுக்குள்

(B) within 60 days
60 நாட்களுக்குள்

(C) within 20 days
20 நாட்களுக்குள்

(D) within 90 days
90 நாட்களுக்குள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

68. Match the following under CPC provisions:
பின்வருவனவற்றை உரிமையியல் சட்ட பிரிவின் கீழ் பொருத்துக :

| | Facts | | CPC Provision |
|---|---|---|---|
| (a) | Appeal from original order<br>அசல் உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு | 1. | Sec. 148 A<br>பிரிவு 148 அ |
| (b) | Revision<br>சீராய்வு | 2. | Sec. 100<br>பிரிவு 100 |
| (c) | Second appeal<br>இரண்டாம் மேல்முறையீடு | 3. | Sec. 115<br>பிரிவு 115 |
| (d) | Right to lodge a caveat<br>கேவேட் மனுதாக்கல் செய்வதற்கான உரிமை | 4. | Sec. 96<br>பிரிவு 96 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

69. A decree can be executed by the attachment of immovable property under ___________ of the following one.
உரிமையியல் விசாரணை முறைச் சட்டத்தின் கீழ்க்கண்ட ___________ விதியின் கீழ், அசையாச் சொத்தை இணைக்க வேண்டி ஒரு நிறைவேற்று தீர்ப்பாணை அளிக்க முடியும்.

(A) Order 21, Rule 10
கட்டளை 21, விதி 10

(B) Order 21, Rule 32
கட்டளை 21, விதி 32

(C) Order 21, Rule 54
கட்டளை 21, விதி 54

(D) Order 21, Rule 58
கட்டளை 21, விதி 58

(E) Answer not known
விடை தெரியவில்லை

70. Where a plaintiff is precluded by rules from instituting a further suit in respect of any particular cause of action, he shall not be entitled to institute a suit in respect of such cause of action in any court to which this code applies. This rule is stated in ___________ of C.P.C. 1908.

ஒரு குறிப்பிட்ட வழக்குமூலம் தொடர்பாக ஒரு வழக்கு தொடுக்க ஒரு வாதியானவர் சிவில் விதிமுறைகளின் மூலம் தடுக்கப்பட்டு இருக்கும்போது, அந்த வழக்கு மூலம் குறித்த வழக்கை, C.P.C.-1908 பொருந்தக் கூடிய வேறெந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்ய தடையிருப்பதாகக் கருத வேண்டும். இது தொடர்பான உரிமையியல் நடைமுறைச் சட்டப் பிரிவு ——————.

(A) Section 9 of C.P.C.
பிரிவு – 9 உ.வி.மு.ச.

(B) Section 10 of C.P.C.
பிரிவு – 10 உ.வி.மு.ச.

(C) Section 11 of C.P.C.
பிரிவு – 11 உ.வி.மு.ச.

(D) Section 12 of C.P.C.
பிரிவு – 12 உ.வி.மு.ச.

(E) Answer not known
விடை தெரியவில்லை

71. With reference to pleadings, consider the following statements – Find out the wrong statements.
“வாதுரைகள்” குறித்த பின்வரும் கூற்றுகளை கருத்திற்கொள்க – தவறான கூற்றை கண்டறிக.

(i) Pleadings includes plaint and Written statement
வழக்குரையையும் எதிர்வழக்குரையையும் உள்ளடக்கியதே வாதுரை ஆகும்

(ii) Content of plaint explained under order 7
கட்டளை 7ல் வழக்குரை குறித்த உள்ளடக்கங்கள் விளக்கப்பட்டுள்ளது

(iii) Defendant’s pleading is plaint
பிரதிவாதியின் வாதுரை என்பது வழக்குரை ஆகும்

(iv) Written statement explained under order 9
கட்டளை 9ல் எதிர்வழக்குரை குறித்து விளக்கப்பட்டுள்ளது

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) and (iv) only
(iii) மற்றும் (iv) மட்டும்

(D) (ii) and (iv) only
(ii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

72. Which of the following is incorrect?
கீழ்கண்டவற்றில், எது தவறானவை?

(i) Reference is mentioned under section 114, CPC and Review is mentioned under section 115.
உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ், பிரிவு 114-பரிந்துரையைக் குறிக்கிறது, பிரிவு 115-மறுஆய்வை குறிக்கிறது.

(ii) Reference is made pending a suit and review is made after the decree is passed.
ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது, பரிந்துரை செய்யப்பட வேண்டும்; ஆணை நிறைவேற்றத்திற்கு பின் மறுஆய்வு செய்யப்பட வேண்டும்.

(iii) Party refers the case for reference to the HC, whereas rule - court refers the case for review.
ஒரு வழக்கில் தரப்பினர், அந்த வழக்கை உயர்நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யலாம்; மறுஆய்வுக்கு, கீழ் நீதிமன்றம் உயர்நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யலாம்.

(A) (ii) only
(ii) மட்டும்

(B) (i) only
(i) மட்டும்

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(D) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

73. In CPC, power of court to record admission under order XII was introduced through which amendment?
உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ், உத்தரவு XII-ன் கீழ், நீதிமன்றம் ஏற்புரையை பதிவு செய்யும் அதிகாரம், எந்த வருட திருத்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டது?

(A) 1956

(B) 1967

(C) 1947

(D) 1977

(E) Answer not known
விடை தெரியவில்லை

74. Match the following (under order VIII, CPC-1908) :

உத்தரவு VIII, CPC-1908 - உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் வருவனவற்றை பொருத்துக :

| | Facts<br>பொருண்மைகள் | | Statutory provisions<br>சட்டவிதிகள் |
|---|---|---|---|
| (a) | New ground of defence<br>எதிர்வாதத்திற்கான புதிய காரணங்கள் | 1. | Rule 6 c<br>விதி 6 c |
| (b) | Exclusion of counter-claim<br>எதிர் உரிமைகோரலை விலக்குதல் | 2. | Rule 2<br>விதி 2 |
| (c) | Equitable set-off<br>நியாயமான சமன்செய்தல் | 3. | Rule 8<br>விதி 8 |
| (d) | New facts pleaded<br>புதிய பொருண்மைகள் | 4. | Rule 6<br>விதி 6 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

75. Which Article of the Indian constitution provides for transfer of certain cases to a High court?
இந்திய அரசமைப்பு சட்டம், எந்த சரத்தின் கீழ், சில வழக்குகளை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றும் அதிகாரம் உண்டு?

(A) Article 228
சரத்து 228

(B) Article 238
சரத்து 238

(C) Article 218
சரத்து 218

(D) Article 258
சரத்து 258

(E) Answer not known
விடை தெரியவில்லை

76. In which case the supreme court held that "to claim backwages for the non-employment period the employee has to plead and prove that he was not gainfully employed".
எந்த வழக்கில் உச்சநீதிமன்றம், "பணியாளர் தன்னுடைய பணிநீக்க காலத்திற்கு பின் சம்பளம் கோர லாபகரமான பணியில் இல்லை என்பதை வழக்குரையில் தெரிவித்து நிரூபித்திருக்க வேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளது.

(A) UP State Brassware corporation Ltd. and others V. Udai Narain Pandey
உ.பி மாநில பிராஸ்வேர் கார்பரேசன் லிட் மற்றும் பலர் எதிர் உதய் நாராயன் பாண்டே

(B) Gujarat Tubes (p) Ltd. V. workmen
குஜராத் டியூப் (பி) லிட் எதிர் பணியாளர்

(C) TNSTC and others V. Shanmugam
த.ந.அ.போ.க மற்றும் பலர் எதிர் சண்முகம்

(D) SAIL V. Federation of workers union
செயில் எதிர் பணியாளர் சங்க கூட்டமைப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

77. Choose the right answers among type
சரியான விடையை தேர்வு செய்க :

If the discharge or dismissal was not justified, then the court or Tribunal have the following powers as per the Industrial disputes Act, 1947.

நீக்கப்படுதல் அல்லது விலக்கப்படுதல் நியாப்படுத்தப்படாத பட்சத்தில், தொழிற் தகராறு சட்டம், 1947கீழ் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்திற்கு கீழ்கண்ட அதிகாரங்கள் உள்ளது.

(i) set aside the order
ஆணையை தள்ளுபடி செய்தல்

(ii) direct reinstatement of the workmen
தொழிலாளியை திரும்ப வேலையில் அமர்த்த ஆணை

(iii) send it for revision to the committee
குழுவிற்கு திரும்ப சீராய்விற்காக அனுப்புதல்

(iv) award lesser punishment in lieu of discharge or dismissal
நீக்கம் அல்லது விலக்குதலுக்கு பதிலாக குறைந்த தண்டனை அளித்தல்

(A) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(B) (i), (ii) and (iii) only
(i), (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i), (ii) and (iv) only
(i), (ii) மற்றும் (iv) மட்டும்

(D) (i) and (iv) only
(i) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

78. Any employer, workman, trade union or the prescribed representatives of the workmen aggrieved by the order of the certifying officer, _________ days from the date on which copies of the draft standing orders are sent, appeal to the appellate authority.
சான்றிடப்பட்ட நிலையாணையினை, அதன் நகல் கிடைக்கப்பெற்ற எத்தனை நாட்களுக்குள், அதனை எதிர்க்க விரும்பும் தொழிலாளியோ, தொழிற்சங்கமோ, அதன் பிரதிநிதிகளோ, அல்லது முதலாளியோ மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்?

(A) within 30 days
30 நாட்களுக்குள்

(B) within 45 days
45 நாட்களுக்குள்

(C) within 60 days
60 நாட்களுக்குள்

(D) within 90 days
90 நாட்களுக்குள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

79. Match the following sections in the Industrial Employment (Standing orders) Act, 1946 with the matters it deals with

1946 ம் ஆண்டு தொழிற்சாலை வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டத்தின் பின்வரும் பிரிவுகளை அதனோடு தொடர்புடைய விசயங்களோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Section 2(c)<br>பிரிவு 2(c) | 1. | Submission of draft standing order<br>வரைவு நிலை ஆணையை சமர்ப்பித்தல் |
| (b) | Section 2(g)<br>பிரிவு 2(g) | 2. | Certification of standing order<br>நிலை ஆணையை சான்றிடுதல் |
| (c) | Section 3<br>பிரிவு 3 | 3. | Certifying officer<br>சான்றிதழ் வழங்கும் அலுவலர் |
| (d) | Section 5<br>பிரிவு 5 | 4. | Standing orders<br>நிலை ஆணைகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

80. Match the following section numbers with corresponding provisions :
கீழ்க்குறிப்பிட்டுள்ள சட்டவகையங்களை அதன் பிரிவுகளோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Date of operation of standing orders<br>நிலையாணைகள் செயலுறுத்தும் தேதி | 1. | Section 12 A<br>பிரிவு 12 A |
| (b) | Register of standing orders<br>நிலையாணை பதிவேடு | 2. | Section 7<br>பிரிவு 7 |
| (c) | Posting of standing orders<br>நிலையாணை தெரியப்படுத்துதல் | 3. | Section 9<br>பிரிவு 9 |
| (d) | Temporary application of Model Standing orders<br>மாதிரி நிலையாணைகளின் தற்காலிக அமல்படுத்துதல் | 4. | Section 8<br>பிரிவு 8 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

81. Which one is related to the case of Victoria Mills Co. Ltd. Vs Presiding Officer Labour Court (AIR 1970)
பின்வருவனவற்றுள் விக்டோரியா மில்ஸ் கோ. லிட்-எதிர்-பிரிஸிடிங் ஆபிசர், தொழிலாளர் நீதிமன்றம் (AIR 1970) என்ற வழக்கு எதனோடு தொடர்புடையது?

(A) Concilation officer
சமரச அதிகாரி

(B) Misconduct of an employee
பணியாளர் தவறான நடத்தை

(C) Promotion
பதவி உயர்வு

(D) Superannuation
வயது முதிர்வு

(E) Answer not known
விடை தெரியவில்லை

82. Which of the following statement is correct in the light of chapter V-A of the I.D. Act 1947?

தொழிற் தகராறு சட்டம் 1947ன் V-A அத்தியாயத்தினை கருத்தில் கொண்டு கீழ்கண்டவற்றில் எது சரி என்று தேர்ந்தெடு.

(i) Chapter V-A not applicable to industrial establishment having less than 50 workmen

50 பணியாளர்களுக்கு குறைவாக உள்ள தொழிற் நிறுவனங்களுக்கு V-A அத்தியாயம் பொருந்தாது.

(ii) Chapter V-A is applicable to industrial establishment which is seasonal in character

பருவகால தன்மையுள்ள தொழிற் நிறுவனங்களுக்கு V-A அத்தியாயம் பொருந்தும்.

(A) (i) is correct (ii) is incorrect
(i) சரி (ii) தவறு

(B) (i) is incorrect (ii) is correct
(i) தவறு (ii) சரி

(C) (i) and (ii) are correct
(i) மற்றும் (ii) ஆகியவை சரி

(D) (i) and (ii) are incorrect
(i) மற்றும் (ii) ஆகியவை தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

83. In the Bangalore Water Supply and Sewage Board v. R. Rajappa and others case held by Supreme Court in the definition of the term Industry. The number of Judges in this landmark judgement held.

'தொழிற்சாலை' என்ற பதத்தை வரையறை செய்த வழக்கான Bangalore Water Supply and Sewage Board v. R. Rajappa and others வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை.

(A) Five Judges
5 நீதிபதிகள்

(B) Seven Judges
7 நீதிபதிகள்

(C) Nine Judges
9 நீதிபதிகள்

(D) Thirteen Judges
13 நீதிபதிகள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

84. Under the Industrial Disputes Act, the inability of an employer on account of shortage of raw materials to give employment to a workmen, whose name appears on the muster-rolls of his Industrial establishment and who has not been retrenched is considered as

தொழில் சச்சரவுகள் சட்டத்தின் கீழ், தனது தொழில் நிறுவனத்தின் தொழிலாளர் வருகையேட்டில் தோன்றும், ஒரு பணிநீக்கம் செய்யப்படாத ஒரு தொழிலாளிக்கு, மூலப்பொருட்களின் பற்றாக்குறையின் காரணமாக வேலை வழங்க இயலாமல் போவது என்னவாக கருதப்படும்?

(A) Retrenchment
ஆட்குறைப்பு

(B) Termination
பணி முடிவுறச் செய்தல்

(C) Lay off
தற்காலிக வேலை நிறுத்தம்

(D) Lock out
கதவடைப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

85. Which of the following options is not included in the definition of "Wages" under the Industrial Disputes Act?
தொழில் சச்சரவுகள் சட்டத்தின் கீழ் "ஊதியம்" என்ற வரையறையில் பின்வரும் விருப்பங்களில் எது சேர்க்கப்படவில்லை?

(i) Any gratuity payable on the termination of service
பணி நீக்குதல் செய்யும்போது செலுத்த வேண்டிய எந்த ஒரு பணிக்கொடையும்

(ii) Any commission payable on the promotion of sales
விற்பனை மேம்படுத்துதல் செய்யும் போது செலுத்த வேண்டிய தரகுத் தொகை

(iii) Any travelling concession
ஏதேனும் பயணச் சலுகை

(iv) Any dearness allowance
ஏதேனும் அகவிலைப்படி

(A) (iv) only
(iv) மட்டும்

(B) (iii) and (iv) only
(iii) மற்றும் (iv) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) only
(i) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

86. Consider following statement and find out the true relating to strike
பின்வரும் கூற்றுகளை ஆராய்க. வேலைநிறுத்தம் தொடர்புடையவற்றில் சரியானதை கண்டறிக.

(a) There should be cession of work.
வேலையை நிறுத்துதல் வேண்டும்.

(b) The duration of cessation of work is immaterial
வேலை நிறுத்தத்தின் காலம் முக்கியமற்றது.

(c) Joining demonstration in connection with strike amounts to strike
வேலை நிறுத்தம் தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் சேருவது வேலைநிறுத்தத்திற்கு சமம்

(A) (a) only true
(a) மட்டும் சரி

(B) (a) and (b) are true
(a) மற்றும் (b) சரி

(C) (c) only true
(c) மட்டும் சரி

(D) (a) and (c) are true
(a) மற்றும் (c) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

87. Which of the following options is a characteristic of trade union?
பின்வரும் விருப்பங்களில் எவை தொழிற்சங்கத்தின் சிறப்பியல்புகள் ஆகும்?

(i) Common Objective
பொதுவான குறிக்கோள்

(ii) Industrial action
தொழில்துறை நடவடிக்கை

(iii) Voluntary Association
தன்னார்வ சங்கம்

(iv) Intermediary
இடைநிலை

(A) (iv) only
(iv) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i), (iii) and (iv) only
(i), (iii) மற்றும் (iv) மட்டும்

(D) (ii) and (iv) only
(ii) மற்றும் (iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

88. Any person who has attained the minimum age of __________ years may become eligible to be a member of a registered trade union, subject to any rules of the trade union to the contrary.
குறைந்தபட்சம் ———————— வயதை எட்டிய எந்தவொரு நபரும், அதற்கு மாறாக தொழிற்சங்கத்தின் ஏதேனும் விதிகளுக்கு உட்பட்டு, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தில் உறுப்பினராக தகுதி பெறலாம்.

(A) 10

(B) 12

(C) 18

(D) 15

(E) Answer not known
விடை தெரியவில்லை

89. According to Trade Union Act, 1926 atleast __________ percent of the votes are recorded in favour of the proposal of amalgamation.

தொழிற்சங்க சட்டம், 1926இன்படி குறைந்தபட்சம் ———— சதவீத வாக்குகள் இணைப்பதற்கான முன்மொழிவுக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) 40% (B) 50%

(C) 60% (D) 75%

(E) Answer not known
விடை தெரியவில்லை

90. Which one of the following provision discuss about the change of name?

கீழ்கண்ட எந்த பிரிவானது பெயர் மாற்றம் குறித்து விளக்குகிறது?

(A) Section 20 of Trade Union Act 1926
தொழிற்சங்க சட்டம் – 1926 – பிரிவு – 20

(B) Section 21 of Trade Union Act 1926
தொழிற்சங்க சட்டம் – 1926 – பிரிவு – 21

(C) Section 22 of Trade Union Act 1926
தொழிற்சங்க சட்டம் – 1926 – பிரிவு – 22

(D) Section 23 of Trade Union Act 1926
தொழிற்சங்க சட்டம் – 1926 – பிரிவு – 23

(E) Answer not known
விடை தெரியவில்லை

91. Which of the following is provided under the third schedule of the Factories Act 1948?

பின்வருவனவற்றில் எது தொழிற்சாலைகள் சட்டம் 1948இன் மூன்றாவது அட்டவணையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது?

(A) List of compoundable offences
தண்டனைக்குரிய குற்றங்களின் பட்டியல்

(B) List of industries involving hazardous processes
அபாயகரமான செயல்முறையை உள்ளடக்கிய பட்டியல்

(C) List of occupational diseases
தொழில் நோய்களின் பட்டியல்

(D) List of notifiable diseases
அறிவிக்கப்பட்ட நோய்களின் பட்டியல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

92. Which of the following statements are true about Employees' Family Pension Scheme?
பின்வருவனவற்றுள் எவை பணியாளர் குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் சரியான கூற்றினை கூறுகிறது?

(i) It provides financial assistance to the family of the deceased employee.
இது இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குகிறது

(ii) The spouse and children of the deceased employee and eligible to receive benefits.
இறந்த பணியாளரின் மனைவி மற்றும் குழந்தைகள் பலன்களைப் பெற தகுதியுடையவர்கள்

(iii) It provides Medical benefits to the employees' family.
பணியாளர்களின் குடும்பத்திற்கு மருத்துவ பலன்கள் வழங்குகிறது

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(C) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

93. Assertion [A] : The Factories Act does not contain any specific provision for noise control.

கூற்று [A] : தொழிற்சாலை சட்டத்தில் இரைச்சல் கட்டுப்பாடு சம்பந்தமாக எந்தவொருப் பிரிவும் இல்லை.

Reason [R] : However, under the third schedule, "noise induced hearing loss" is mentioned as a notifiable disease.

காரணம் [R] : இருப்பினும் மூன்றாவது அட்டவணையில் "இரைச்சலினால் ஏற்படும் கேட்கும்திறன் இழப்பு" என்பது அறிவிக்கக்கூடிய நோயாக உள்ளது.

(A) [A] is true but [R] is false
[A] சரி; ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] [A] விற்கான சரியான விளக்கமாகும்

(C) [A] is false, [R] is true
[A] தவறு; [R] சரி

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [R] [A] விற்கான சரியான விளக்கமாகாது

(E) Answer not known
விடை தெரியவில்லை

94. Match the following section in Motor Transport Worker Act, 1961 with the issue it deal with :

1961-ஆம் ஆண்டின் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் பின்வரும் பிரிவுகளோடு அவற்றில் கூறப்பட்டுள்ள விசயங்களோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Section 8<br>பிரிவு 8 | 1. | Medical facilities<br>மருத்துவ வசதிகள் |
| (b) | Section 9<br>பிரிவு 9 | 2. | Canteens<br>உணவகம் |
| (c) | Section 10<br>பிரிவு 10 | 3. | Rest rooms<br>ஓய்வறைகள் |
| (d) | Section 11<br>பிரிவு 11 | 4. | Uniforms<br>சீருடைகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

95. If the false fitness certificate was used under the Motor Transport Workers Act 1961. The penalty is ___________.

மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் 1961-ன் கீழ் உடல் தகுதிக்கான தவறான சான்றிதழைப் பயன்படுத்துவதற்க்கு ———— காலம் சிறைத்தண்டனை வழங்கப்படும்.

(A) Upto one month imprisonment
ஒரு மாதம் வரை

(B) Upto three months imprisonment
மூன்று மாதம் வரை

(C) Fine only
அபராதம் மட்டும்

(D) Upto one year imprisonment
ஒரு வருடம் வரை

(E) Answer not known
விடை தெரியவில்லை

96. "The Government Transport Service Department was a motor transport undertaking within the meaning of section 2(g) of the Motor Transport Workers Act, 1961" is decided in __________ case.

"1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின்படி பிரிவு 2(g) இன்படி அரசு போக்குவரத்து சேவைத் துறையும் மோட்டார் போக்குவரத்து நிறுவனமே" என்று தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கு ———— ஆகும்.

(A) Municipal council Raipur Vs State of Madhya Pradesh
முனிசிபல் கவுன்சில் ராய்ப்பூர் Vs மத்திய பிரதேச அரசு

(B) Government Transport Service Vs S.L. Mishra
அரசு போக்குவரத்து சேவை Vs S.L. மிஷ்ரா

(C) The State Transport Corporation Vs Government of Tamil Nadu
மாநில அரசுப் போக்குவரத்துக் கழகம் Vs தமிழ்நாடு அரசு

(D) Tamil Nadu State Transport Corporation vs Neethivilangan
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் Vs நீதிவிலங்கன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

97. In __________ case it was decided that the Employees Provident Fund and Miscellaneous Provisions Act 1952 is applicable for home workers engaged through contractors.
கீழ்க்குறிப்பிட்டுள்ள ————— வழக்கில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர வகையங்கள் சட்டம், 1952 ஆனது ஒப்பந்ததாரர்களால் பணியமர்த்தப்பட்ட வீட்டு ஊழியர்களுக்கும் பொருந்தும் என்று தீர்மானிக்கப்பட்டது.

(A) Mangalore Gandhi Beedi works Vs Union of India
மங்களூர் காந்தி பீடி வொர்க்ஸ் எதிர் இந்திய ஒன்றியம்

(B) Regional provident fund commissioner Vs Shiv Kumar
வட்டார வருங்கால வைப்புநிதி ஆணையாளர் எதிர் சிவ் குமார்

(C) Shanti Garments Pvt. Ltd. Vs Regional Provident Fund Commissioner
சாந்தி கார்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் எதிர் வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையாளர்

(D) P.G.T. components Pvt. Ltd. Noida Vs Assistant P.F. Commissioner, Employees Provident Fund Organisation
P.G.T. காம்பௌனன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், நொய்டா எதிர் வருங்கால வைப்புநிதி ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

98. According to section 7-D of the EPF appellate tribunal shall consist of __________ person.
பிரிவு 7-D இன்படி EPF மேல்முறையீட்டு தீர்ப்பாயம் எத்தனை நபர்களைக் கொண்டு இருக்கும்.

(A) One
ஒன்று

(B) Three
மூன்று

(C) Five
ஐந்து

(D) Ten
பத்து

(E) Answer not known
விடை தெரியவில்லை

99. Assertion [A] : Arrears of Provident fund contribution payable by public limited company cannot be recovered from Managing Director of the company.

கூற்று [A] : வரையுடை பொது நிறுவனத்திடமிருந்து செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள வருங்கால வைப்புநிதி பங்களித்தலை அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரிடமிருந்து பெற இயலாது.

Reason [R] : It is the company in which the principal employer not the Director.

காரணம் [R] : அந்த நிறுவனமே முதன்மை பணிக்கு அமர்த்துபவர் ஆவார், அந்த நிறுவனத்தின் இயக்குநர் அல்ல.

(A) [A] is true but [R] is false
[A] என்பது உண்மை ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] உண்மையே மேலும் [R] என்பது [A] க்கான சரியான காரணம்

(C) [A] is false, [R] is true
[A] என்பது தவறு ஆனால் [R] உண்மையே

(D) Both [A] and [R] is false
[A] மற்றும் [R] இரண்டுமே தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

100. The landmark case of B. Shah Vs Labour Court, Coimbatore related to __________

பி.ஷா-எதிர்-தொழிலாளர் நீதிமன்றம், கோயம்பத்தூர் என்ற முக்கிய வழக்கு __________ தொடர்பானவை.

(A) Maternity benefits
மகப்பேறு நலன்கள்

(B) Provident fund
சேமநல நிதி

(C) Minimum wages
குறைந்தபட்ச ஊதியம்

(D) Employment of children
குழந்தைகளை பணிக்கு அமர்த்துதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

101. Sec 6 A of Employees Provident funds Act, 1952 deals with

பணியாளர் வருங்கால வைப்புநிதிச் சட்டம், 1952 பிரிவு 6 Aவின் கீழ், __________ திட்டமாக வரையயியலும்.

(A) Employees State Insurance
பணியாளர் அரசு காப்பீடு

(B) Employees Welfare Fund
பணியாளர் நல நிதியம்

(C) Employee's Pension Scheme
தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

(D) Dependent Welfare Fund
சார்ந்திருப்போர் நல நிதியம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

102. Where temporary disablement results from the injury a half-monthly payment of the sum equivalent to __________% of monthly wages of the employee to be paid.
தீங்கின் விளைவாக ஏற்பட்ட தற்காலிக உடல் தகுதியிழப்பிற்கு தொழிலாளி மாதந்தோறும் பெற்று வருகின்ற சம்பளத்தில் __________% அளவிலான தொகையினை ஒவ்வொரு அரைமாதத்திற்கும் இழப்பீடாக கொடுக்கப்பட வேண்டும்.

(A) 25%
(B) 50%
(C) 75%
(D) 100%
(E) Answer not known
விடை தெரியவில்லை

103. The famous English Case Simpson Vs. Sinclair Case (1917) AC 127 related to __________.
பிரபல ஆங்கில வழக்கான சிம்ப்சன்-எதிர்-சின்கிளேயர் வழக்கு (1917) AC 127__________சம்மந்தப்பட்டதாகும்.

(A) accident arising in the course of employment
பணியின் போது ஏற்பட்ட விபத்து
(B) determination of compensation
இழப்பீட்டைக் கணக்கிடுதல்
(C) limitation period to claim compensation
இழப்பீடு கோருவதற்கான கால வரம்பு
(D) jurisdiction of a commissioner
ஆணையரின் அதிகார வரம்பு
(E) Answer not known
விடை தெரியவில்லை

104. Which of the following is an occupational disease as per the ESI Act?
ESI சட்டத்தின்படி பின்வருவனவற்றில் எது தொழில் சார்ந்த நோய் ஆகும்?

(A) Hypertension
உயர் இரத்த அழுத்தம்

(B) Bagassosis
பாகாசோசிஸ்

(C) Liver cirrhosis
கல்லீரல் அழற்சி

(D) Crohn's disease
கிரோன் நோய்

(E) Answer not known
விடை தெரியவில்லை

105. Match the following based on the Employees Compensation Act - 1923 :

தொழிலாளர் இழப்புச் சட்டம் 1923-ன் அடிப்படையில் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Medical Examination<br>மருத்துவ பரிசோதனை | 1. | Section 14<br>பிரிவு 14 |
| (b) | Contracting<br>ஒப்பந்தமிடல் | 2. | Section 13<br>பிரிவு 13 |
| (c) | Insolvency of employer<br>முதலாளியின் நொடிப்புநிலை | 3. | Section 11<br>பிரிவு 11 |
| (d) | Remedies of employer against stranger<br>தெரியாத நபருக்கு எதிராக முதலாளிக்கு இருக்கும் தீர்வழிகள் | 4. | Section 12<br>பிரிவு 12 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

106. Match the followings :

பின்வருவனவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Penal Statute<br>தண்டனை செய் சட்டம் | 1. | Legislative Debates<br>சட்டமன்ற விவாதங்கள் |
| (b) | Beneficial Statute<br>பயன்தரும் செய் சட்டம் | 2. | Preamble<br>முகப்புரை |
| (c) | External Aid<br>வெளிப்புறக் காரணி | 3. | Industrial Dispute Act<br>தொழிற்சாலை சச்சரவு சட்டம் |
| (d) | Internal Aid<br>உட்புறக் காரணி | 4. | Bharatiya Nyaya Sanhita<br>பாரதிய நீதிச் சட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

107. ___________ case is known as 'Nirbhaya Case'.

___________ வழக்கு நிர்பயா வழக்கு என அறியப்படுகிறது.

(A) Tukaram Vs. State of Maharastra
துக்காராம் எதிர் மகாராஷ்டிர அரசு

(B) State of Karnataka Vs. Krishnappa
கர்நாடக அரசு எதிர் கிருஷ்ணப்பா

(C) State of Punjab Vs. Ramdev
பஞ்சாப் அரசு எதிர் ராம்தேவ்

(D) Mukesh and another Vs. N.C.T. of Delhi
முகேஷ் மற்றும் ஒருவர் எதிர் டெல்லி அரசு

(E) Answer not known
விடை தெரியவில்லை

108. Rights in <u>re propria</u> means ___________
"சொத்தமைவு உரிமை" என்பது

(A) Right over public property
பொதுச் சொத்தின் மீதான உரிமை

(B) Right over another's property
வேறொருவரின் சொத்தின் மீதான உரிமை

(C) Right over one's own property
தன் சொத்தின் மீதான உரிமை

(D) Right over government property
அரசாங்க சொத்தின் மீதான உரிமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

109. The Maxim "Ignorantia juris non excusat" means ___________.
"இக்னோரட்டியா ஜீரிஸ் நான் எக்ஸ்கியுஸட்" என்ற மூதுரையின் பொருள்

(A) Ignorance of law is excusable
சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க முடிந்தது

(B) Ignorance of fact is excusable
உண்மை பற்றிய அறியாமை மன்னிக்க முடிந்தது

(C) Ignorance of law is not excuse
சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க இயலாதது

(D) Ignorance of fact is not excuse
உண்மை பற்றிய அறியாமை மன்னிக்க இயலாதது

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. Assertion [A] : Dead men are no longer persons in the eye of the law.

கூற்று [A] : இறந்த மனிதர்கள் சட்டத்தின் பார்வையில் நபர்கள் அல்ல.

Reason [R] : They have no rights because they have no interest.

காரணம் [R] : அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை ஏனென்றால் அவர்களுக்கு எந்த விருப்புரிமையும் இல்லை.

(A) [A] is true but [R] is false
[A] சரியானது ஆனால் [R] தவறானது

(B) [A] is false but [R] is true
[A] தவறானது ஆனால் [R] சரியானது

(C) [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரியானது [R] ஆனது [A] உடைய சரியான விளக்கம்

(D) Both [A] and [R] are false
[A] மற்றும் [R] இரண்டும் தவறானது

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. The liberty and right are synonymous stated by
சுதந்திரம் மற்றும் உரிமை ஆகியவை ஒத்த தன்மை கொண்டவை என கூறியவர்

(A) Salmond
சால்மண்ட்

(B) Bentham
பெந்தம்

(C) Austin
ஆஸ்டீன்

(D) Kelson
கெல்சன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. "There can be no right without a corresponding duty" was clearly articulated by __________.

"கடமை இல்லாமல் அதற்கிணையான உரிமை இருக்க முடியாது" என தெளிவாக கூறியவர் யார்?

(A) Augustine
அகஸ்டின்

(B) Hobbes
ஹோப்ஸ்

(C) Salmond
சால்மண்ட்

(D) Savigny
சேவிக்னி

(E) Answer not known
விடை தெரியவில்லை

113. Assertion [A] : A dissenting judgement, valuable and important though it may be, cannot count as part of the ratio.

கூற்று [A] : ஒரு மாறுபட்ட தீர்ப்பு மதிப்புமிக்கதாகவும், முக்கியமானதாகவும் இருந்தாலும், அதை தீர்ப்பு முடிவின் காரணியின் ஒரு பகுதியாகக் கணக்கிட முடியாது.

Reason [R] : Dissenting judgement played no part in the court's reaching their decisions.

காரணம் [R] : நீதிமன்றம் தங்கள் முடிவை எட்டுவதில் ஒரு மாறுபட்ட தீர்ப்புக்கு எந்த பங்கும் இல்லை.

(A) [A] is true but [R] is false
[A] சரி ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are false
[A] மற்றும் [R] இரண்டும் தவறு

(C) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி மேலும் [R], [A] வுக்கான சரியான விளக்கம்

(D) [A] is false but [R] is true
[A] தவறு ஆனால் [R] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

114. One of the following jurist stated "Custom is to society what law is to the state"

"சமுதாயத்திற்கு வழக்காறுகள் எப்படியோ அது போன்றே நாட்டிற்கு சட்டமாகும்" – என்று கூறிய சட்ட அறிஞர்

(A) Kelson
கெல்சன்

(B) Holland
ஹாலந்து

(C) Grey
கிரே

(D) Salmond
சால்மண்ட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. In which one of the following case even the obiter dicta of the Supreme Court is binding upon the subordinate courts?

பின்வரும் எந்த ஒரு வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் புறவுரைக்கு கீழமை நீதிமன்றங்கள் கட்டுப்பட வேண்டும் என கூறுகிறது?

(A) Somwanti -v- State of Punjab
சம்வந்தி – எதிர் – பஞ்சாப் அரசு

(B) Vasudeo -v- State of Maharashtra
வாசுதியோ – எதிர் – மஹாராஷ்ட்ரா அரசு

(C) A.R. Antulay -v- R.S. Nayak
A.R. ஆன்டுலே – எதிர் – R.S. நாயக்

(D) Tribuvan Das -v- Ratilal
திரிபுவன் தாஸ் – எதிர் – ரதிலால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

116. Assertion [A] : Austin's view that law is the command of sovereign' is not supported by historical evolution of law when customs played a significant role in regulating human conduct.

கூற்று [A] : ஆஸ்டீனின் கருத்துபடி சட்டம் என்பது இறையாண்மையின் ஆணையின் மூலம் பிறப்பிக்கப்பட்ட சட்டமே தவிர, கடந்தகால வரலாற்று நிகழ்வினால் வந்ததல்ல. மனித நடத்தையை ஒழுங்குபடுத்துவதில் வழக்காறு முக்கிய பங்கு வகிக்கிறது.

Reason [R] : Customs still continue to be a potent source of law even after the coming into existence of the state.

காரணம் [R] : அரசு உருவான பிறகும் கூட வழக்காறு சட்டத்தின் சக்திவாய்ந்த மூலமாக இருக்கின்றன.

(A) [A] is true but [R] is false
[A] சரி, ஆனால் [R] தவறு

(B) Both [A] & [R] are true; and [R] is the correct explanation of [A]
[A] ம் [R] ம் சரி; மற்றும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம்

(C) [A] is false, [R] is true
[A] தவறு [R] சரி

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct
[A] ம் [R] ம் சரி ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் அல்ல என்பது சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

117. 'A' found a bundle of bank notes on the floor of 'B's shop. The party who lost them could not be found-decide – 'A' and 'B's liability

'A' என்பவர் 'B' யின் கடையின் தரையில் பணக்கட்டுக்களை கண்டு எடுத்தார். அவற்றின் உரிமையாளரை கண்டுபிடிக்க முடியவில்லை, 'A' மற்றும் 'B' யின் பொறுப்பு நிலையை முடிவு செய்யுங்கள்.

(A) 'A' has lawful possession
'A' யிடம் தான் சட்டப்படியான உடைமை உள்ளது

(B) 'B' has lawful possession
'B' யிடம் தான் சட்டப்படியான உடைமை உள்ளது

(C) 'A' has no right to keep the Bank notes
'A' பணக்கட்டுக்களை வைத்துக் கொள்ள எந்த உரிமையும் இல்லை

(D) 'B' has right to claim the Bank notes
'B' க்கு பணக்கட்டுக்களை உரிமை கோர உரிமை உண்டு

(E) Answer not known
விடை தெரியவில்லை

118. Assertion [A] : The realist looks on the law as the command of the sovereign but his sovereign is not parliament but the judge.

கூற்று [A] : உண்மையில் சட்டம் என்பது இறையாண்மையின் கட்டளையாகும். அந்த இறையாண்மையானது பாராளுமன்றத்திடமிருந்து அல்ல, மாறாக அது நீதிபதியிடமிருந்து தோன்றுவதாகும்.

Reason [R] : For the realist the sovereign is the court.

காரணம் [R] : உண்மையாக இறையாண்மை என்பது நீதிமன்றம் சார்ந்ததாகும்.

(A) [A] is true but [R] is false
[A] சரி ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம்

(C) [A] is false, [R] is true
[A] தவறு ஆனால் [R] சரி

(D) Both [A] and [R] are false
[A] மற்றும் [R] இரண்டும் தவறு

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. __________ said that Jurisprudence is the systematic arrangement of the rules followed by the courts.
நீதிமன்றங்களால் பின்பற்றப்படும், விதிகளின் முறையான ஏற்பாடானது சட்டவியலாக இருக்கிறது என்று யார் சொன்னார்?

(A) Dr. Allen
டாக்டர். ஆலென்

(B) Maine
மெஃய்னி

(C) Gray
க்ஃரே

(D) Grotius
க்ரோஷியஸ்

(E) Answer not known
விடை தெரியவில்லை

120. The book namely "Law and Morals (1926) written by __________ "
சட்டம் மற்றும் ஒழுக்கம் (1926) என்ற புத்தகத்தினை கீழ்கண்டவற்றுள் யார் எழுதினார்?

(A) Roscoe Pound
ரோஸ்கோ பவுண்ட்

(B) Montesquieu
மாண்டெஸ்கியூ

(C) Kelson
கெல்சன்

(D) Sir Henry Maine
சர் ஹென்றி மெய்ன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

121. Any regulations or rules contained in the Articles of Association of a company is __________ when it is repugnant to the provisions of Companies Act.

ஒரு நிறுவனத்தின் 'நிறும நடைமுறை விதிகளில்' உள்ள எந்த ஒழுங்காற்று ஆணைகளும், விதிகளும், நிறுவனச் சட்ட வகையங்களுக்கு முரணாக இருப்பின் அவை __________ ஆகும்.

(A) Unlawful
சட்ட முரணான நிலை

(B) Voidable
தவிர்தகு நிலை

(C) Illegal
முறைகேடான நிலை

(D) Void
செல்லா நிலை

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. Under Sec 2(20) and 2(67) of Companies Act 2013, the term "under any previous company law" means
நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 2(20)ல் மற்றும் 2(67) "எந்த முந்தைய நிறுவனச் சட்டத்தின் கீழ்" என்பது

(a) The Companies Act 1956
நிறுவனச் சட்டம் 1956

(b) The Indian Companies Act 1913
இந்திய நிறுவனச் சட்டம் 1913

(c) The Indian Companies Act 1882
இந்திய நிறுவனச் சட்டம் 1882

(d) The Registration of Companies (Sikkim) Act 1961
சிக்கிம் நிறுவனங்களின் பதிவு சட்டம் 1961

(A) Only (a)
(a) மட்டும்

(B) (a) and (b) only
(a) மற்றும் (b) மட்டும்

(C) (a), (b) and (c) only
(a), (b) மற்றும் (c) மட்டும்

(D) (a), (b), (c) and (d)
(a), (b), (c) மற்றும் (d)

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. Under the Companies Act the term "Body Corporate" does not include the following :
நிறுவனச் சட்டத்தின் கீழ் "நிறுவனம்" என்ற சொல் பின்வருவனவற்றுள் எதை உள்ளடக்குவதில்லை?

(a) a company incorporated outside India
ஒரு நிறுவனம் வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்டு இருந்தால்

(b) a co-operative society
கூட்டுறவு சங்கம்

(c) public financial institutions
பொது நிதி நிறுவனங்கள்

(d) any other body corporate not being a company
நிறுவனம் அல்லாத ஏதேனும் மற்ற கார்ப்பரேட்

(A) (a) & (b)
(B) (c) & (d)
(C) (b) & (d)
(D) (a) & (c)

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. __________ contains the fundamental conditions upon which alone the company has been incorporated.
நிறுவனம் இணைக்கப்பட்டதற்கான அடிப்படை நிபந்தனைகளை மட்டுமே __________ கொண்டுள்ளது.

(A) Prospectus
திட்ட அறிவிப்பு

(B) Articles of Association
செயல்முறை விதிகள்

(C) Memorandum of Association
அமைப்பு முறை ஏடு

(D) Pre-incorporation Contract
தோன்றுவதற்கு முந்தைய ஒப்பந்தங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. The Doctrine of __________ allows all those who deal with the company to assume that the provisions of the articles have been observed by the officers of the company.
நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட அனைவரும், நிறுவனத்தின் அதிகாரிகளால் செயல்முறை விதிகளின்படி கடைப்பிடிக்கப்பட்டதாகக் கருதுவதற்கு எந்த __________ கோட்பாடு அனுமதிக்கிறது.

(A) Indoor Management
உட்புற மேலாண்மை

(B) Constructive Notice
கொள்நிலை அறிக்கை

(C) Ultra Vires
வரம்பு மீறல்

(D) Golden Rule
பொன் விதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

126. The term “company” is normally reserved for __________ purpose.
நிறுவனம் என்ற சொல் பொதுவாக __________ நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(A) Specific
குறிப்பிட்ட

(B) Economic
பொருளாதார

(C) Non-economic
பொருளாதாரம் அல்லாத

(D) Statutory
சட்டரீதியான

(E) Answer not known
விடை தெரியவில்லை

127. Doctrine of lifting the corporate veil can be applied under which of the following statutory provisions
கீழ்க்கண்ட எந்த சட்டப்பிரிவின் கீழ் திரை விலக்குதல் கோட்பாட்டை நிறுவனங்களுக்கு செயல்படுத்தலாம்

(A) S. 329
பிரிவு 329

(B) S. 76
பிரிவு 76

(C) S. 382
பிரிவு 382

(D) S. 378
பிரிவு 378

(E) Answer not known
விடை தெரியவில்லை

128. "A living person has a mind which can have knowledge or intention and he has hands to carry out his intention. A corporation has none of these, it must act through living persons". This statement was said by ___________.

"உயிருள்ள ஒருவருக்கு அறிவு அல்லது எண்ணம் இருக்கக்கூடிய ஒரு மனம் உள்ளது. மேலும் அவர் தனது நோக்கத்தை நிறைவேற்ற கைகளைக் கொண்டிருக்கிறார். ஒரு நிறுவனத்தில் இவை எதுவும் இல்லை, அது உயிருள்ள நபர்கள் மூலம் செயல்பட வேண்டும்" இந்த கூற்றை கூறியவர்___________?

(A) Marshall J.
மார்சல். நீதிபதி

(B) Haldane LC
ஹல்டேன் தலைமை நீதிபதி

(C) Lord Reid
லார்டு ரீடு

(D) McCardie J.
மெக்கார்டி நீதிபதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. Which of the following committee is having power to examine the statement of affairs, recovery of property, taking over assets, sale of assets, review of audit reports and payment of dividends.

விவகாரங்களின் அறிக்கை, சொத்தை மீட்டெடுப்பது, சொத்துக்களை கையகப்படுத்துதல், சொத்துக்களை விற்பது, தணிக்கை அறிக்கைகளை மறுபரிசீலனை செய்தல் மற்றும் ஈவுத்தொகை செலுத்துதல் ஆகியவற்றை ஆய்வு செய்ய பின்வரும் குழுவில் எந்தக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது?

(A) Winding up Committee
கலைப்புக் குழு

(B) CSR Committee
நிறுமச் சமூக பொறுப்பு குழு

(C) Both (A) & (B)
(A) & (B) இரண்டும்

(D) Audit Committee
தணிக்கை குழு

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. As per Section 165 of the Companies Act, 2013 a person cannot hold office at the same time as a director in more than __________ companies.

பிரிவு 165 நிறுவனச் சட்டம், 2013ன்படி, ஒரு நபர்__________ மேற்பட்ட நிறுவனங்களில் ஒரே நேரத்தில் இயக்குநராகப் பதவி வகிக்க முடியாது.

(A) 10

(B) 15

(C) 20

(D) 25

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. The principle of rule by majority applicable to the management of the affairs of the company was laid in the leading case of

பெரும்பான்மையினரால் ஆட்சி செய்யும் கொள்கை, நிறுவனத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்குப் பொருந்தும் வகையில், எந்த பிரபலமான வழக்கில் உருவாக்கப்பட்டது.

(A) Foss V. Harbottle
ஃபோஸ் V. ஹர்பாட்டில்

(B) Cook V. Deeks
குக்ஸ் V. டிக்ஸ்

(C) Mason V. Harris
மேசன் V. ஹரிஸ்

(D) Edward V. Halliwell
எட்வர்ட் V. ஹேலிவெல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

132. A company may appoint maximum __________ Number Directors.
ஒரு நிறுவனம் அதிகபட்சமாக __________ இயக்குநர்களை நியமிக்கலாம்.

(A) 20 Directors
20 இயக்குனர்கள்

(B) More than 15 directors
15 க்கும் மேற்பட்ட இயக்குனர்கள்

(C) 15 Directors
15 இயக்குனர்கள்

(D) 10 Directors
10 இயக்குனர்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. Assertion [A] : Reconstruction implies the carrying on of an existing business in some altered form.

கூற்று [A] : மறுநிர்மானம் என்பது ஏதாவது ஒரு மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் தற்போதைய வணிகத்தை எடுத்துச்செல்வதாக உட்கிடையாக உணர்த்துகிறது.

Reason [R] : So that, the persons interested in the business may remain substantially the same.

காரணம் [R] : எனவே, வணிகத்தில் ஆர்வமுள்ள நபர்கள் கணிசமாக ஒரே மாதிரியாக இருக்க முடியும்.

(A) [A] is only true
[A] மட்டும் சரி

(B) [A] is false, but [R] is true
[A] தவறு, ஆனால் [R] சரி

(C) [A] and [R] is true, and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி, மற்றும் [R] என்பது [A]-ன் சரியான விளக்கம்

(D) [A] and [R] is true, but [R] is not the correct explanation of [R]
[A] மற்றும் [R] சரி, ஆனால் [R] என்பது [A]-ன் சரியான விளக்கம் இல்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

134. The Central Government will provide required approvals to the companies for normal winding up process, this was enforced by ____________.

வழக்கமான நிறுவன கலைப்பு செயல்முறைக்கு நிறுவனங்களுக்கு தேவையான ஒப்புதல்களை மத்திய அரசு வழங்கும், இது ____________ நடைமுறைக்கு உட்பட்டது.

(A) The Insolvency Bankruptcy Code, 2016
திவால் நிலை மற்றும் நொடிப்புநிலை குறியீடு, 2016

(B) The Companies (Winding-up) Rules, 2020
நிறுவனங்களின் (கலைப்பு) விதிகள், 2020

(C) The Companies Rules, 2021
நிறுவனங்களின் விதிகள், 2021

(D) The National Company Law Tribunal Rules, 2016
தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாய விதிகள், 2016

(E) Answer not known
விடை தெரியவில்லை

135. Match the followings :

கீழ்க்கண்டவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Failure to return of money<br>பணத்தை திரும்பப்பெற தவறுதல் | 1. | Avoidance of Tax<br>வரி ஏய்ப்பு |
| (b) | Mis-statement in prospectus<br>விவரக்குறிப்பின் தவறான அறிக்கை | 2. | Section 12<br>பிரிவு 12 |
| (c) | Mis description of name<br>பெயரின் தவறான விளக்கம் | 3. | Sections 34 & 35<br>பிரிவுகள் 34 & 35 |
| (d) | InRe Sir Dinshaw Maneckjee Petit<br>சார் தீன்ஷா மேனக்ஜி பெடிட் குறிப்பில் | 4. | Section 39<br>பிரிவு 39 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
